# வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

3-ஆம்பக்கத் தொடர்ச்சி

கம்பம் - காசி முத்து மாணிக்கம்
நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,
சிங்கை பிரபாகரன்

பாலக்கோடு - தஞ்சை கூத்தரசன்
பி. பழனியப்பன்
முனைவர் நா. சந்திரபாபு

ஆரணி - கரூர் முரளி
எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,
பேரணாம்பட்டு இராஜேந்திர பிரசாத்

துறையூர் - நந்தனம் நம்பிராஜன்
காடுவெட்டி
நா. தியாகராஜன், எம்.எல்.ஏ.,
சாவல்பூண்டி மா. சுந்தரேசன்

மேலூர் - முனைவர் பொன்னேரி சிவா
மாண்புமிகு பி. மூர்த்தி
வயலூர் கிருஷ்ணமூர்த்தி

மேட்டூர் - வேலூர் கென்னடி
டி.எம். செல்வகணபதி, எம்.பி.,
நெய்வேலி தங்கம்

தூத்துக்குடி - அத்திப்பட்டு சாம்ராஜ்
மாண்புமிகு கீதா ஜீவன்
இரம்ஜான் பேகம்

திருமயம் - ஆடுதுறை உத்திராபதி
மாண்புமிகு எஸ். ரகுபதி
ஈகை தனசேகர்

உளுந்தூர்பேட்டை - சைதை சாதிக்
தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,
கம்பம் பாண்டியன்

பட்டுக்கோட்டை - வே. மதிமாறன்
க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.,
மதுரை சேவியர்

புதுக்கோட்டை - தஞ்சை கலைமணிபாரதி
கே.கே. செல்லபாண்டியன்
மங்கலம் பிரபாகரன்

தென்காசி - தமிழ் கா. அமுதரசன்
நா. ஜெயபாலன்
பூங்காநகர் கண்ணன்

விருத்தாசலம் - சோம. செந்தமிழ்ச்செல்வன்
மாண்புமிகு சி.வெ. கணேசன்
வேலூர் இரமேஷ்

திருவெறும்பூர் - சென்னை த. அரங்கநாதன்
பரிதி இளம்சுருதி

திருச்செந்தூர் - ஆரூர் மணிவண்ணன்
மாண்புமிகு
அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
திருப்பூர் கூத்தரசன்

ஒட்டன்சத்திரம் -
தூத்துக்குடி சரத்பாலா
மாண்புமிகு அர. சக்கரபாணி
ஆம்பூர் தருமன்

புதுச்சேரி - கந்திலி கரிகாலன்
புதுவை ஆர். சிவா, எம்.எல்.ஏ.,
குடந்தை ராமகிருஷ்ணன்

இராஜபாளையம் - வரகூர் காமராஜ்
மாண்புமிகு
கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்
கவிஞர் சிவமுத்து வளவன்

தஞ்சாவூர் - வழக்கறிஞர் சிவ. ஜெயராஜ்
துரை. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.,
விசார் க. தமிழரசன்

மயிலாடுதுறை - நாத்திகம் நாகராசன்
நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ.,
பொள்ளாச்சி சித்திக்

உதகை - பவானி கண்ணன்
பா.மு. முபாரக்
திருப்பூர் ரஜினி செந்தில்

திருமங்கலம் - சேலம் சுஜாதா
மு. மணிமாறன்
பழனி அப்பாஸ்

கோபிசெட்டிபாளையம் - போடி காமராஜ்
என். நல்லசிவம்
குடியாத்தம் அன்பு
ஜெ. வீரமணி

அண்ணாநகர் - பசும்பொன் இரவிச்சந்திரன்
நே. சிற்றரசு
க. எழிலன்

காரைக்கால் - கோவி. லெனின்
எச். நாஜிம்
ஆலங்குடி செல்வராஜ்

பெரியகுளம் - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி
தங்க. தமிழ்செல்வன், எம்.பி.,
கு. வாஞ்சிநாதன்

மன்னார்குடி - மதுரை அலெக்சாண்டர்
திருப்பூர் மனோகர்பாபு
மன்னை த. சோழராஜன்

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 13.01.2025 அன்று திருச்சிராப்பள்ளி பெரியமிளகுபாறை கி.ஆ.பெ விசுவநாதன் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர்கள், மருத்துவ மாணவ, மாணவிகள், செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுடன் இணைந்து சமத்துவ பொங்கலிட்டு, பொங்கல் விளையாட்டுப்போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் வே.சரவணன் , கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ்.குமரவேல், துணை முதல்வர் திருமதி.அர்சியா பேகம், மருத்துவமனை துணை கண்காணிப்பாளர் உதய அருணா, மரு.அருண், மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் மருத்துவ பணியாளர்கள், அரசு அலுவலர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், குழந்தைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சங்கராபுரம் வட்டம் – சோழம்பட்டு கிராமம்,

# மணிமுத்தா நதியின் குறுக்கே தடுப்பணை!

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் தா.உதயசூரியன் கோரிக்கை!



*சென்னை, ஜன.17 -* சட்டப்பேரவையில் சங்கராபுரம் தொகுதி - கழக உறுப்பினர் தா.உதயசூரியன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் துரைமுருகன் அளித்த பதிலும் வருமாறு:-

**தா. உதயசூரியன்:** சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு கிராமம், மணிமுக்தா நதியின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு கிராமம் அருகே மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**தா. உதயசூரியன்:** சோழம்பட்டு கிராமம், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே மட்டுமல்லாமல், கச்சிராபாளையம், கோமுகி நதியின் குறுக்கேயும், அதே போல பாப்பகால் ஓடையின் குறுக்கே பம்பரப்பட்டு என்ற இடத்திலும், ரிஷிவந்தியம் அருகிலுள்ள மணலூர்பேட்டையின் குறுக்கே அணைக்கட்டு வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் 2, 3 முறை கருத்துருக்கள் கொடுத்திருக்கிறோம். அதனுடைய கருத்துருக்கள் துறைக்கு வந்திருக்கிறது. ஆகவே, மழைக்காலங்களில் வருகிற தண்ணீரைத் தேக்கி அங்கிருக்கின்ற கிணறுகளுக்கு நீர் உறிஞ்சுவதற்கும், நீராதாரம் பெருகுவதற்கும், கால்நடைகளுக்கு ஏதுவாக பயனடைகின்ற வகையிலும் மேற்படி நான் சொன்ன அந்த அணைக்கட்டுகளை அமைச்சர் அவர்கள் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முன்னுரிமையின் அடிப்படையில், அவற்றையெல்லாம் இந்த நிதியாண்டிலே எடுத்து, அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த தடுப்பணையை அமைக்க 2021-2022-ஆம் ஆண்டே முடிவு செய்யப்பட்டு, ரூபாய் 9 கோடியே 6 இலட்சம் அளவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அன்றைய தினம் நிதிநிலைமைக்கேற்ப இடம் தரவில்லை. தற்போது அரசின் கொள்கைபடி, நிலத்தடிநீர் உறிஞ்சுதல் வகையில், *overexploited and critical* பகுதிகளில் மட்டுமே தடுப்பணைகளை அமைக்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்தடமானது நிலத்தடிநீர் உறிஞ்சுதல் வகையில், உறிஞ்சுதல் வகைப்பாட்டில் *safe zone* அமைந்துள்ளது. எனவே, முன்னுரிமை அடிப்படையில் அப்பகுதியில் தடுப்பணை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. இத்தடத்திற்கு மேல்புறம் 3 கிலோ மீட்டர் தொலைவில் தளவாய்பட்டு அணைக்கட்டும், கீழ்புறத்தில் 2 கிலோ மீட்டர் தொலைவில் மூரார்பாளையம் அணைக்கட்டும் அமைந்துள்ளது. இருப்பினும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

**தா. உதயசூரியன்:** ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஓர் அழகான வார்த்தையைச் சொல்வார்கள். அதாவது, கொட்டாங்குச்சி போல் இருக்கின்ற ஏரிகளெல்லாம் தாம்பூல தட்டு போல் ஆகியிருக்கிறது; தூர் வாரப்படும் என்று சொன்ன நிகழ்வுகள் உண்டு. அதனுடைய அடிப்படையில், 50 ஆண்டுக்காலமாக வடக்கனந்தல் அருகில் இருக்கின்ற கோமுகி அணை கட்டப்பட்டு 50 ஆண்டுக் காலமாகிறது. 50 ஆண்டுக் காலம் ஆகியிருக்கிற காரணத்தினால் முழுக்க, முழுக்க கல்வராயன் மலை அடிவாரத்திலே கோமுகி அணை இருக்கிறது. ஆகவே, 30 சதவிகிதம் அளவுக்கு மண் அரிப்பு ஏற்பட்டு, தூர்ந்திருக்கிறது. ஆகவே, 70 சதவிகிதம்தான் நீர் கொள்ளளவுக்கு வாய்ப்பிருக்கிறது.

ஆகவே, அமைச்சர் அவர்கள் *safe, semicritical, critical, overexploited zone* என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் வெறும் ஆற்றுப்படுகைதான் இருக்கிறது. மலைக்கு அருகில் தூர்வாருகின்றபோது முதலமைச்சர் அவர்களின் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்கிற திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு ரூ.25 கோடி மதிப்பீடு என்றும் துறைக்கு வந்திருக்கிறது. ஆகவே, கோமுகி அணையைத் தூர் வாருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமல்லாமல், நான் சொன்ன இந்த *semicritical, critical zone* இல்லாமல் அந்த அணைக்கு மேல் பொட்டியம், கல்படை ஆகிய இரண்டு ஆறுகள் மலையிலிருந்து உருவெடுத்து வருகிறது. அப்படி வருகின்றபோது அங்கே விளைநிலங்களோ, கிணறுகளோ, ஏரிகளோ, குளங்களோ கிடையாது. ஆகவே, அரசின் கோட்பாட்டுக்கு இடையூறு இல்லாமல் இருக்கிற காரணத்தினால், சிரிய நீர்த்தேக்கங்கள் பொட்டியம் ஆற்றின் அருகிலும், கல்படை ஆற்றின் படுகையிலும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு நீர்த்தேக்கங்கள் அங்கே கட்டிக்கொடுக்கின்றபொழுது, மூன்று போகங்கள் விளைவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த கோமுகி அணையைத் தூர்வாரச் செய்வதோடு, இரண்டு நீர்த்தேக்கங்களையும், பொட்டியையும் கல்படை ஆற்றின் படுகையிலே கட்டித்தருவதற்கு அமைச்சர் அவர்கள்முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** இந்த அணையைப் பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொன்னேன் இது *save zone* பகுதியிலே அமைந்து இருக்கிறது. ஆனால், இருந்தாலும் இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி ஏற்றுக்கொள்ளப்படும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஜன.17-ஆம் தேதி - ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி

# கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வேட்புமனு தாக்கல்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் சு.முத்துசாமி பேட்டி!



*ஈரோடு, ஜன.17-* ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் இன்று (17ம் தேதி) வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளதாக ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார். கழகத்தில் மேலும் 3 பேர் போட்டியிட வாய்ப்பு கேட்டார்கள். 4 பேரும் சரி சமமாக கழகத்திற்கு பாடுபட்டவர்கள். ஒருவருக்கு சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மற்ற 3 பேரும் தேர்தல் பணிகளை கவனிப்பார்கள்.

இன்று (17ஆம் தேதி) மதியம் 12 மணிக்கு ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வேட்புமனு தாக்கல் செய்வார்.

தேர்தல் விதிமுறைகளை 100 சதவீதம் கடைபிடித்து கூட்டணிக் கட்சிகளுடன் தேர்தல் பணிகளை தொடங்க உள்ளோம். இந்த தேர்தலில் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் கழக தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று நம்புகிறோம்.

அ.தி.மு.க. தேர்தலைப் புறக்கணித்தது குறித்து பேசுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் அங்கிருக்கும் சூழ்நிலை பொறுத்து முடிவெடுத்திருப் பார்கள். அவர்களின் கட்சி பிரச்சினை குறித்து பேச விரும்பவில்லை. கடந்த தேர்தலில் விதிமீறல்கள் இருந்ததால் தேர்தலை புறக்கணித்ததாக கூறியதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். ஓட்டு போட செல்லும் வாக்காளர்கள் அவர்களது விருப்பத்தை தான் ஓட்டாக போடுகிறார்கள். நாங்கள் அவர்களின் கையை பிடித்து ஓட்டு போட வைக்க முடியாது.

கட்சி சார்பில் மாநாடு, நிகழ்ச்சி என்றால் அனைவரும் அந்த உணர்வுடன் சென்று நிற்போம். அந்த உணர்வில்தான் கடந்த தேர்தலில் பல அமைச்சர்கள் வந்திருந்தார்கள். தற்போது யார் யார் வருவார்கள் என்று கூற இயலாது. யாரையும் வர வேண்டுமென கட்டாயபடுத்தவில்லை. கழக வேட்பாளர் அறிவிக்க பட்டதில் சிலருக்கு வருத்தம் இருக்கலாம். அதை நாங்கள் மதிக்கிறோம்.

இதற்கு முந்திய தேர்தலில் திருமகன் ஈவெரா, ஈவிகேஎஸ்.இளங்கோவன் ஆகியோருக்கு எல்லோரும் எப்படி பாடுபட்டார்கள் என்று அறிவோம். அதே போல் இந்த தேர்தலிலும் பாடுபடுவார்கள். தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க. போட்டியிடுவதால் சிலர் தங்களின் உணர்வினை வெளியிடுவார்கள். இருந்தாலும் அவர்கள் தேர்தல் பணிகளை கட்டாயம் செய்வார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த அனைத்து வாக்குறுதிகளையும் முழுமையாக நிறைவேற்றி இருக்கிறார். இது பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த தேர்தலில் பொதுமக்கள் யாரையும் அடைத்து வைக்கவில்லை. அவர்களாகவே விருப்பப்பட்டு தான் வாக்குகளை அளித்தார்கள் என ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறினார்.

அதுபோது கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், கழக விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி என். சிவக்குமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம. சங்கரலிங்கம்
### சனவரி 15 (2016)



**தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் அடியொற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**1964 முதல் 1984 வரையிலான இருபது ஆண்டுகள் தொடர்ந்து தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – நான்கு ஆண்டுகள் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1998 முதல் 2004 வரை இந்திய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.**


**அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக ‘அறிஞர் அண்ணா கல்லூரி’ ஒன்றினை நிறுவி, அதன் முதல்வராக இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி நடராசன் (தாளமுத்து)
### சனவரி 15 (1939)



**சென்னை பண்ணைக்கார ஆண்டியப்பன் தெருவைச் சேர்ந்த நடராசன், தன் பெற்றோரிடம் “நான் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட விரும்புகிறேன். தமிழர்களின் பின் சந்ததியர்க்காகச் சிறை செல்ல நான் பின்னடையப் போவதில்லை” என்றபோது, முழுமனதோடு தன் ஒரே மகனுக்கு ஒப்புதல் அளித்தார்கள் பெற்றோர்.**

**5.12.1938 அன்று மறியல் களம் சென்று இந்தி எதிர்ப்புப் போரில் பங்குபெற்று ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றார்.**

**சிறையில் காய்ச்சல் ஏற்பட்டு நிலைமை கவலைக்கிடமான போதும், சிறைக் காவலர்கள் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியேறும்படி எவ்வளவோ மன்றாடினர், வற்புறுத்தினர். ஆனாலும் “செத்தாலும் சிறையில் சாவேனே ஒழிய, மன்னிப்பு என்ற பேச்சே கிடையாது” எனத் தெரிவித்து சிறையிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.**

**சிறைச் சாலையில் இறந்துபோன நடராசனும், தாளமுத்துவும்தான் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலிகள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**